[1979 நவம்பர் 3

வடாற்காடு மாவட்ட உயர்நிலைப் பள்ளிகளில் வேலை நாட்கள்.

* வினா எண் 89—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் ஆண்டு வேலை நாட்கள் 200 என்று இருக்கும்பொழுது வடாற்காடு மாவட்ட உயர்நிலைப் பள்ளிகளுக்கு மட்டும் 210 என்றுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதனை மாற்றி அமைக்கும்படி முதன்மை கல்வி அலுவலருக்கு பரிந்துரை செய்யும் உத்தேசம் உள்ளதா ?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் வேலை நாட்கள் ஆண்டுக்கு குறைந்த பட்சம் 200 நாட்கள் இருக்க வேண்டுமென்பதுதான் நடைமுறை விதிகளே தவிர 200 நாட்கள்தான் என்பது சரியல்ல.

எதிர் பாராத சூழ்நிலைகளால் பள்ளிகளுக்கு விடுமுறை வேண்டியிருப்பின் வேலை நாட்கள் 200-க்கும் குறைவாக இருந்து விடக்கூடாது என்று, முன்னேற்பாடாக, வட ஆற்காடு மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் 1978-79-ம் கல்வி ஆண்டில் 200 நாட்களுக்கு அதிகமாக வேலை நாட்கள் இருக்கும்படியாக விடுமுறைப் பட்டியல் தயாரித்து பள்ளிகளுக்கு அனுப்பியுள்ளார். 1978–79-ல் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு நாட்கள் நீங்கலாக வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள பள்ளிகளில் 203 வேலை நாட்களே இருந்தன.

(ஆ) மேலே கண்ட விவரத்தின் அடிப்படையில் இது எழவில்லை.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவரவர்களே, விடுமுறைகள் மாநிலம் முழுவதும் ஒரே அடிப்படையில் தானிருக்க வேண்டும். அப்படியிருக்கும்போது ஒரு மாவட்டத்திற்கு மட்டும் விடுமுறைகள் ஏன் அப்படியிருக்கின்றன என்பதுதான் கேள்வி· அதற்கு அமைச்சரின் செயலர் பதில் சொல்லவில்லை.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்); பேரவைத்தலைவரவர்களே, அந்தந்த மாவட்டத்தில் ஏற்படுகின்ற தவிர்க்கமுடியாத காரணங்களாலே சில நேரங்களிலே வேலை நாட்கள் குறையும்படியான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகள் அப்படிப்பட்ட சூழ்நிலையைத் தவிர்ப்பதற்காக விடுமுறை நாட்களைக் குறைத்து வேலை நாட்களை அதிகரித்து அறிவித்திருக்கிறார்கள். அந்தந்த மாவட்ட நிலைமைகளைக் குறித்து இது அறிவிக்கப்படுகிறது.